DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.7**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : கார்த்திகேயன்

Father Name : பிச்சைமணி

VILLAGE :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2025.

( 2 வது எதிரி ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 1 வது எதிரி ஆஜர் இல்லை, 1 வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது இஸ்மாயில்புரம் 7 வது தெருவில் குடியிருக்கிறேன். நான் நகைக்கடை வைத்திருக்கிறேன். எனக்கு சாட்சி எண்.7 முருகானந்ததை தெரியாது. நான் அழகர் நகரில் நியூ மார்டன் என்ற பெயரில் நகைக்கடை வைத்திருக்கிறேன். என் கடைக்கு வந்து போலிசார் நேற்று நடந்த சம்பவத்திற்கு படம் வரைந்துள்ளோம் என்று எங்களிடம் சொல்லி, கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 22.11.2015 ம் தேதி 12.00 மணிக்கு நானும் செல்வவிநாயகம் பேன்சி ஸ்டோர் நடத்தி வரும் முருகானந்தம் என்பவரும் அழகர் கோவில் மெயின் ரோடு அருகில் குரு சலூன் கடையில் நின்று பேசிக்கொண்டிருந்த போது, புதூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற எண்.1017/2015 பிரிவு 341, 294(b), 307 IPC வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், அன்றைய தினம் TN 59 AN 27 என்ற மாருதி ஸ்விப்ட் என்ற வெள்ளை நிற காரை அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், மேற்படி பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.